தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 4 | சென்னை | 5-4-58 | சனிக்கிழமை | இதழ் 38

பாகிஸ்தான் நெருக்கடி

'பாகிஸ்தானில் அடிக்கடி மந்திரி சபை கவிழ்வது ஆச்சரியப்படக்கூடியதல்ல. 1947-ல் சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இன்றுவரை எத்தனை மந்திரி சபை கவிழ்ந்துள்ளன அங்கே? லியாகத்அலிகானுக்குப் பிறகு எந்த அமைச்சரவையும் உருப்படியாக இருந்தது கிடையாது. காரணம் பலப்பல. அவற்றுள் முக்கியமானது அங்கே நல்ல பலம் வாய்ந்த ஒரு கட்சியும், அதற்கு அடுத்தபடியாக எதிர்க் கட்சியும் அமையவில்லை. மந்திரி சபை அமைக்கக் கூடுமானால் அதுவே ஜனநாயகத்தின் சிறந்த அறிகுறியாகும் எந்த நாட்டில் இரண்டு கட்சிகள் சம பலமுடையவையாக இருக்கின்றனவோ அந்த நாடே கட்சி அமைப்பில் சிறந்து விளங்கும் நாடாகும். உதிரிக்கட்சிகள் பல உள்ள நாடு கட்சி அமைப்பில் பலவீனம் உள்ள நாடாகும்.

இந்த முறையில் பார்த்தால் பாகிஸ்தான் முன்னேறவில்லை என்று கூற வேண்டும். முஸ்லிம் லீக், தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம், குடியரசுக் கட்சி, ஐக்கிய முன்னேற்றக்கட்சி, கிருஷக் ஸரமிக் கட்சி, காங்கிரஸ், நைஸாமி இஸ்லாம்கட்சி அவாமி லீக் தேசிய அவாமி லீக்

—என்று பல கட்சிகள் உள்ள சட்டசபையில் எந்தக் கட்சிக்கும் மெஜாரிட்டி இல்லாததால் அடிக்கடி கூட்டு மந்திரிசபைகள் அமைப்பதும், அவைகள் சில பல காரணங்களால் கவிழ்வதும் பழக்கமாகிவிட்டது, பாகிஸ்தானில். அதனால் அங்கே ஒரு பலமான அமைச்சரவை அமைவது என்பது இயலாத காரியமாகி விட்டது.

பாகிஸ்தானைப் போன்று கட்சி அமைப்பில்முன்னேற்றம்பெருத ஒரு நாடு ஐரோப்பாவிலும் உள்ளது. அது பிரான்ஸ்நாடாகும். பிரான்சில் அடிக்கடி மந்திரிசபை மாறிக்கொண்டிருக்கும். ஆங்கிலத்தில் வேடிக்கையாகச் சொல்லுவார்கள், "பிரெஞ்சுக்காரர்கள் தங்கள் கோட்டுகளை மாற்றுவதுபோல் அடிக்கடி தங்கள் மந்திரி சபையையும் மாற்றுகிறார்கள்" பிரான்சில் நகைச்சுவையாக மற்றொன்றும் சொல்லுவார்கள். சிற்றுண்டி விடுதிக்குச் செல்வோர், சாப்பிட்டு முடிந்து வெளிவந்ததும், மந்திரிசபைநீடிக்கிறதா,கவிழ்ந்து விட்டதா என்றுகேட்பார்களாம். பிரான்சில் இப்படி அடிக்கடி நேரக்காரணம் பாகிஸ்தானைப் போன்று அங்கும் நல்ல கட்சி முறை அமையவில்லை. ஆசியாவில் ஒரு பிரான்சாகப் பாகிஸ்தான் காட்சியளிக்கிறது, கட்சி அமைப்பில்.

அமெரிக்காவில் ஆகட்டும், பிரிட்டனில் ஆகட்டும், இந்த நிலைமை எந்த நாளிலும் உண்டானதில்லை. இங்கிலாந்தில் இரண்டே பெரிய கட்சிகள்- கன்சர்வேடிவ், தொழில் கட்சிகள் உள்ளன. மூன்றாவது மிதவாதிகள் கட்சியும் உள்ளது. ஆனால் ஆட்சி கை மாறுவது முதல் இரண்டு கட்சிகளுக்குள் தான். கன்சர்வேடிவ் கட்சி ஆட்சியில் இருந்தால் தொழிற் கட்சி எதிர்க்கட்சியாக இருக்கும். தொழிற்கட்சி ஆட்சியில் இருக்கும்போது,கன்ஸர்வேடிவ் கட்சி எதிர்க்கட்சியாகஇருக்கும். இதேபோலத்தான் அமெரிக்காவிலும் இரண்டே கட்சிகள் உள்ளன. ஜனநாயகக்கட்சி, குடியரசுக்கட்சி என்பவை அங்கு உள்ளன. இவை தவிர வேறு கட்சி ஆட்சிபீடத்தில் அமரமுடியாது. இங்கிலாந்தில் சென்ற ஐம்பது ஆண்டுகளில் ஒரு புதிய கட்சிகூடத் தோன்றவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

பிரான்ஸில் நான்கு, ஐந்து கட்சிகள் இருப்பதும், ஒன்றிற்காவது சட்ட மன்றங்களில் மெஜாரிட்டி இல்லாமல் இருப்பதும் அரசியல் குழப்ப நிலைக்கு முக்கிய காரணங்களாகும் ஒரு கட்சி சட்ட மன்றத்தில் தோல்வியுற்ருல், ஆட்சிபீடம் ஏறுவதற்கு அதற்கு அடுத்தபடியாக வேறு ஒரு கட்சியும் இருப்பதில்லை. ஆகவே, பல்வேறு கட்சிகள், குழுக்கள் சேர்ந்து மந்திரி சபையை ஏற்படுத்துகின்றன. கிடைத்த வரையில் லாபம் என்று பதவிகளைப் பங்கு போட்டுக் கொள்கின்றன. இந்த நிலையில் மந்திரி சபைகள் நீண்டகாலம் நீடித்து நிற்பதில்லை. 1875 முதல் 1925 வரை பிரான்ஸில் 50 க்கு மேற்பட்ட மந்திரி சபைகள் ஆண்டிருக்கின்றன. அதே காலத்தில் பிரிட்டனில் 12 மந்திரிசபைகள் ஆண்டன. மந்திரிசபையின் ஆயுட்காலம் பத்து மாதத்திற்கு மேல் நீடிக்காது என்ற அஸ்திவாரத்தின்மீது தோன்றும் மந்திரி சபைகள் எப்படி நீண்டகாலம் வாழமுடியும். மந்திரி சபையைக் காப்பாற்றிக்கொள்வதில் தங்கள் நேரத்தையும், சிந்தனையையும் செலவழிக்கும் முதல் அமைச்சர் நாட்டு முன்னேற்றத்திற்கான திட்டங்களைத் தீட்டவோ, கவனிக்கவோ, நேரமும் எண்ணமும் இல்லாமல் தவிப்பதில் வியப்பில்லை அல்லவா? இங்கிலாந்தின் முதல் அமைச்சர் என்ருல் உலகம் முழுவதும் அவரைத் தெரிந்திருக்கிறது; ஒரு தனி மதிப்பும் கொடுக்கப்படுகிறது. ஆனுல் பிரான்ஸின் முதல் மந்திரி யார் என்றுகூட அறிந்துகொள்ள யாரும் முயல்வதில்லை.

பிரான்ஸில் கன்ஸர்வேடிவ் கட்சி, தேசீய குடியரசுக் கட்சி, மிதவாதிகள், தீவிர வாதிகள், தீவிர சோஷலிஸ்ட் கட்சி, ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சி, குடியரசு சோஷலிஸ்ட் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி என்று பலப்பல சிறு கட்சிகள் உள்ளன. ஒன்றிற்காவது சட்டமன்றங்களில்மெஜாரிட்டி இருப்பதில்லை. மேலும் பிரெஞ்சு மக்களின் மனுேபாவம் நிலையற்றது; இன்று விரும்பும் கட்சியை நாளைத் தூற்றித் துரத்தியடிப்பார்கள். இந்தக் கொள்கை தேர்தலில் எதிர் ஒலி செய்தால், எந்தக் கட்சியும் முன்னுக்கு வரமுடியாது. பிரெஞ்சு அரசியலில் அடிக்கடி குழப்பங்களும், திடீர்ப் புரட்சிகளும், ஏற்படுவதால், தொடர்ச்சியாக ஒரு மந்திரி சபை நீடிப்பதற்கும் வழியில்லை.

பண்டிதர் கட்சிக்குக் கசையடி !

— அடுத்த பக்கம் —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 4 | 5—4—58 | இதழ் 38

காந்தியோ பரம ஏழை, சந்யாசி......?

கடந்த ஐந்து நாட்களுக்கு முன்பு அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து எல்லாப் பத்திரிகைகளும் எழுதியிருந்தன. மாணவர்கள் என்றால் தங்களுக்கும் தங்கள் கட்சிக்கும் நிரந்தரமான பகைவர்கள் என்று முடிவு செய்திருக்கும் இரண்டொரு ஏடுகள் பல்கலைக் கழகச் சம்பவம் பற்றிய தகவல்களுக்கு தங்கள் தங்கள் விருப்பப்படி மகுடமிட்டு வெளியிட்டிருந்தன. ஆனால் உண்மையில் நடந்த சம்பவங்களை ஆராயும்போது, காங்கிரஸ் கட்சி தனது கடைசி காலத்தில் போலீசின்பேரில் தான் அசைக்கமுடியாத நம்பிக்கையை வைத்துவிட்டது என்ற விடைதானாகக் கிடைக்கிறது. தவறு யாருடைய பக்கமிருப்பினும் தவறைத் திருத்துவதற்கும், தவறை உணர்த்துவதற்கும் போலீசாரை ஏவுவது ஒன்றுதான் வழி என்று பகுத்தறிவு வளராத காலத்திலேகூட மனிதர்கள் தீர்மானித்ததில்லை.

பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற சம்பவங்கள் ஒன்றும் அவ்வளவு பிரமாதமானதாக இல்லாவிட்டாலும், மாணவர்களை அடக்குவதற்கு - துன்புறுத்துவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் வரவேற்கத் தக்கனவாக அமையவில்லை. பெரியவர்கள் என்றும், மற்றவர்களுக்குப் புத்தி கூறத் தங்களுக்குத் தகுதி இருப்பதாகவும் கருதிக்கொண்டிருப்போர் நடந்து கொண்ட முறை, அவர்கள் யாரைக் கொடியவர்கள், விஷமிகள் என்று கூறுகிறார்களோ அவர்களை நல்லவர்கள், பொறுமைசாலிகள் என்று பொது மக்கள் சொல்லத் தக்க வகையில் இருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் எத்தனையோ போராட்டங்களை நடத்தி, மாணவர்கள் வெற்றி கண்டிருக்கிறார்கள். அப்போதெல்லாம் ஒழுங்கு தவறாத மாணவர்கள் இப்போதுமட்டும் தவறுவானேன்? பல்கலைக்கழகத்தை அடியோடு ஒழித்துவிடுவதற்கென்று திட்டமிட்டே மாணவர்கள் நடந்துகொண்டதைப்போலவும் அதைத் தவிர்ப்பதற்குத்தான் இத்தனை பெரிய பாதுகாப்பும் தடியடிப் பிரயோகமும் என்ற தோரணையில் போலீஸ் இலாகா நடந்துகொண்டிருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. போலீசாரின் அடக்குமுறைக் கூத்தும், பல்கலைக்கழக ஆணையாளர்களின் திடீர் உத்தரவுகளும்தான் மாணவர்களைப் பெருங் குற்றவாளிகளாக மக்களுக்குக் காட்டுகின்றனவே தவிர வடநாட்டு மாணவர்கள் செய்யும் கிளர்ச்சியில் ஆயிரத்தில் ஒரு பங்கைக்கூட அண்ணாமலை மாணவர்கள் செய்யவில்லை. தமிழ் மாணவர்கள் நம்பிக்கைக்குப் பேர்போனவர்கள்; தமிழகத்தின் கண்ணியத்தைக் காக்க பேருதவி புரிபவர்கள். நாட்டின் எதிர்காலத்தைப் பாதுகாக்க அற்புதமான சரித்திரத்தை இதயங்களில் புதைத்து வைத்துக்கொண்டிருக்கும் அவர்கள், கடந்து ஐந்து தினங்களாக தென்னாற்காடு மாவட்டத்தில் அனுபவித்த துயரங்கள் கொஞ்சமல்ல. பெட்டியில் இருக்கும் பணத்தையும் எடுக்கமுடியாமல், வந்த பணத்தையும் பெற்றுக்கொள்ள வழியில்லாமல் அகதிகளைப்போல் அலைந்தார்கள் பசியால் வாடினார்கள் என்றால் இந்தக் கொடுமையை யாரிடம் சொல்லித் தீர்த்துக்கொள்வது. அவதிப்பட்டவர்கள் யாரும் சாதாரணமான படிப்பை மேற்கொண்டிருந்தவர்கள் அல்லர். விஞ்ஞான வித்தகர்களாகத் திகழ வேண்டிய பேராசிரியர்களாக வரவேண்டிய-இப்படிப்பட்டவர்களெல்லாம் நெஞ்சம் புண்ணாகும்படி மேலிடத்தார் நடந்துகொண்டிருக்கிறார்கள். இவ்வளவையும் கண்டு, கேட்டு, அனுபவித்த நிதியமைச்சர் சொல்லுகிறார், இது ஆழமான நோயின் அறிகுறிகளாம்! இதுபோன்ற நோய் வேறு பல்கலைக்கழகங்களிலும் காணப்படுகின்றனவாம்! என்ன நோய் அது? ஏன் அமைச்சர் மூடி மறைக்கவேண்டும்? அந்த நோய்க்குக் காரணகர்த்தர்கள் யார்? ஒருவேளை காங்கிரஸ் இயக்கம் தான் அதற்குக் காரணமாக இருந்தால்...போலீசாரின் செயல்கள்தான் தூண்டுதல்களாக இருந்தால்...தண்டிக்கப்பட வேண்டியவர்கள் யார்? காந்தியோ பரம ஏழை, சந்நியாசி-என்று மனமுருகப் பாடினால் மட்டும் போதுமா? அந்தச் சந்நியாசிக் கட்சியின் போலீஸ் அண்ணாமலையில் ஒரு மாணவரின் மூக்கைத் தின்றுவிட்டது. பல மாணவர்களின் இரத்தத்தைக் குடித்துவிட்டது. இதற்கென்ன பரிகாரம்? பல்கலைக் கழகத்தை மூடிவிட்டால்-உணவு விடுதிகளை காலிசெய்து விட்டால் வாதிகள் நிரபராதிகளே என்ற இடைக்கால சூத்திரம் வெற்றி பெற்றுவிடும் என்ற நம்பிக்கையா?

— முன் பக்கத் தொடர்ச்சி —

பிரான்சைப் போன்ற நிலைமையில்தான் பாகிஸ்தானும் உள்ளது. எந்தக் கட்சிக்கும் மெஜாரிட்டி இல்லாமல் போய்விட்ட காரணத்தால் ஒரு மந்திரி சபையும் நீடித்து வாழமுடியாமல் போய்விடுகிறது. தேர்தல் காலத்தில் இதை மனத்தில் வைத்துக்கொண்டிருந்தால் முதல் அமைச்சர்களின் பட்டியல் லியாகத்அலிகானில் தொடங்கி, நாஸிமுத்தீன், குலாம் முகமது, முகமது அலி, மிர்ஸா, சுந்திரிகர், பெரோஸ்கான் நூன்.

—என்று நீண்டுகொண்டே போகவேண்டிய அவசியம் ஏற்பட்டிராது.

இந்தியாவிலும் பல்வேறு கட்சிகள் உள்ளன.

காங்கிரஸ், கம்யூனிஸ்ட், சோஷலிஸ்ட், இந்துமகா சபை, புரட்சி சோஷலிஸ்ட் கட்சி (ஆர்..எஸ். பி.), திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட கழகம், தமிழரசுக்கழகம், தாழ்த்தப்பட்டோர்சம்மேளனம், தேசிய ஜனநாயகக் காங்கிரஸ்(கா.சி.க.) ஜார்கண்ட் கட்சி, பார்வர்ட் பிளாக்

-என்ற அளவில் பட்டியல்நீள்வதோடு ஒவ்வொரு மாநிலத்திலும் சிறு சிறு கட்சிகள் பல உள்ளன. அவைகளையும் சேர்த்துக்கொண்டால் இந்தியாவில் ஏறத்தாழ ஐம்பது கட்சிகளுக்குமேலிருக்கலாம். இத்தகைய ஒரு நாட்டில் உண்மையான ஜனநாயகம் நிச்சயமாக உருவாகமுடியாது. காரணம் வோட்டுகளை இத்தனைக் கட்சிகளும் பங்கு போட்டுக்கொள்வதால் இங்கே காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் அதிகமான வோட்டுகளைப் பெறமுடிகிறது. ஒரு கட்சியின் சர்வாதிகாரம் பிற கட்சிகள் வளரமுடியாத நிலை, ஜனநாயகத்தின் தோல்வி-தலைதூக்கத் துவங்கிவிடுகின்றன. நேருவிற்குப் பிறகு இந்த நிலையை நாம் காணமுடியாது.

காரணம் காங்கிரஸுக்கு வோட்டுப் போடும் பொதுமக்களில் பலர் நேருவின் 'முகத்'தைப் பார்த்துப் போடுகிறார்கள்! நேருவிற்குப் பிறகு காங்கிரஸ் இவ்வளவு 'அசுர' பலம் கொண்ட கட்சியாக விளங்க முடியாது. அப்போது-

வோட்டுகளை ஐம்பது கட்சிகள் பங்கு போட்டுக்கொண்டால்-

இந்தியா ஒரு பிரான்சாக அல்லது ஒரு பாகிஸ்நானாக ஆகிவிடும் அதன் விளைவு?...

இரண்டு அல்லது மூன்று கட்சிகள் இருந்தால் எப்படி இருக்கும்? ஐம்பது கட்சிகள் இருந்தால் எப்படியிருக்கும்? சிந்தித்துப் பார்க்க வேண்டும். பாகிஸ்தான் நமக்குத் தரும் பாடத்தை நாம் நினைவில் வைத்துக்கொண்டால், இரண்டா, மூன்றா, எத்தனை கட்சிகள் வேண்டும் என்பதை முடிவு கட்டிவிடலாம், ஜனநாயகம் செழிக்க இரண்டு அல்லது மூன்று கட்சிகள் இருந்தால் போதும். அதற்குமேல் தேவையில்லை!

—நா. ஜெகன்னாதன், எம். ஏ.



கோவை மாவட்ட தி. மு. கழகத்தின் புதிய செயலாளர் உடுமலை ப. நாராயணன்.

★ ★ ★

வெள்ளித் திரை
(கலை வார ஏடு)
ஆசிரியர் : கலைவேந்தன்
14-4-58 முதல் வெளிவருகிறது
தனிப்பிரதி 7 காசு.
ஆண்டுச் சந்தா 3-75.
★
நிர்வாகி,
வெள்ளித் திரை,
சென்னை-5.

வெளிவந்து விட்டது!
தென்றல் வெண்பா
1000
விலை ரூபாய் 2-50.
விபரங்கட்கு :
மலர் நிலையம், 133, பிராட்வே, சென்னை-1.

எங்கும் கிடைக்கும்

தென்றல்

5-4-58

வாழ்விலும் உறவு! சாவிலும் உறவு!

தண்ணீர் நிறைந்திருக்கும் இடங்களுக்குத் தமிழில் பல பெயர்கள் உண்டு. குளம், குட்டை, கண்மாய், ஏரி, ஊருணி, ஆறு, கடல், ஓடை, கிணறு, ஊற்று, தேக்கம், இவை அப்பெயர்களில் சில. மக்கள் தமக்குப் பயன்படுத்திக்கொள்வதற்காகப் பல வழிகளிலும் நீரைச் சேமித்து வைக்கிறார்கள்.

ஊருணி என்பது பெரும்பாலும் குடிநீருக்கு உதவும் குளமாக இருக்கும். ஊரார் உண்பது ஊருணி. குளம், குட்டை என்பவை பிற பயன்களுக்கான தண்ணீர் நிறைந்திருப்பவை. புதுக்குளம், புதூருணி என்ற தொடர்கள் மிகுதியும் வழக்கில் உள்ளவை. கண்மாய், ஏரி முதலியன வேளாண்மைக்குத் தண்ணீரைத் தேக்கி வைக்கும் இடங்கள். ஏரியில் படகோட்டுவது நல்ல இன்பம். ஆறும் கடலும் இயற்கை மனிதனுக்குத் தந்த செல்வங்கள். ஆற்றுக்குக் கரையமைத்து மனிதன் பயன் காண்கிறான். கடல் நீரின் பயன்கள் பல. கிணறு தண்ணீரெடுக்க நாம் தோண்டியமைத்துக் கொள்ளும் சிற்றமைப்பு. குழாயைத் திருகித் தண்ணீர் குடிப்பதும் பூக்குழாயைத் திறந்துவிட்டுக் குளிப்பதும் பழக்கமாகிவிட்ட பிறகு கிணறு, குளம் இவற்றைப்பற்றிச் சிந்திக்க நமக்கு நேரமேது? ஆற்றில் குளிப்பதும் கடலில் நீராடுவதும் நீச்சல் குளத்தில் ஆடுவதும் உடலுக்கு நன்மை பயக்கும். மலைநாட்டில் பல இடங்களில் வெந்நீர் ஊற்றுக்கள் இருக்கின்றன. அந்த ஊற்றுக்களைத் தேடிச் சென்று மக்கள் நீராடுகின்றனர்.

இப்பொழுது விஞ்ஞானம் வளர்ந்துவிட்டது. மக்கள் குடிக்கும் தண்ணீர் தூயதாக இருக்கவேண்டுமென்பதில் அரசினர் எவ்வளவோ கவனம் செலுத்துகிறார்கள். அதன் பயனாக நீர்த் தேக்கங்களை அமைத்துக் குழாய்கள் மூலம் மக்களுக்குத் தண்ணீரை வழங்குகிறார்கள். நகர மக்கள் பெறுகின்ற அரிய நன்மை இது.

வானம் தரும் அமிழ்தம்

வானம் தருகின்ற அமிழ்தம் மழை. மக்களை வாழ்விப்பது மழை. கைம்மாறு கருதாது மழை வழங்குகின்ற நீரையே, மக்கள் மேற்குறிப்பிட்ட வழிகளில் தேக்கி வைத்துக் கொள்ளுகிறார்கள். குழாயைத் திறந்தால் தண்ணீர் வருவதைப் போல நாம் விரும்புகிறபோதெல்லாம் மழை பெய்யாது. வேண்டாத சமயத்தில் குழாயை அடைத்துவிடலாம் ஆனால் அவ்வாறு மழையை வேண்டாம் என்றாலும் தடுக்கமுடியாது. கண்ணன் கோவர்த்தன கிரியைத் தூக்கிப் பிடித்ததுபோல, குடையைப் பிடித்துக் கொண்டு மழை நம்தலைமீது விழாமல் காத்துக் கொள்ளலாம். அவ்வளவுதான். அதுவும் மலேயாவில், வேண்டாத போது பெய்கின்ற மழையே மிகுதி.

பெய்கின்றபோது மழை நீர் குளத்திலும் குட்டையிலும் சேர்கிறது. அவ்வாறு சேரும் நீர் மழை பெய்யாத காலத்திலும் மக்களுக்குப் பயன்படுகிறது. எப்பொழுதோ பெய்கிறது மழை! ஆனால் மழை நீர் நமக்கு நாள் தவறாமல் கிடைக்கிறது. குளம், குட்டை, ஏரி, தேக்கம் முதலியவற்றால்.

ஔவையார் ஒரு குளத்திற்கு நம்மை இட்டுச் செல்கிறார். நீர் நிறைந்த குளமன்று அது. வற்றிய குளம். தொடர்ந்து மாதக் கணக்கில் மழை பெய்யாவிட்டால், ஆறு, ஏரி, கிணறு எல்லாவற்றிலுமே நீர் வற்றிவிடும். வறண்டுபோன அத்தகைய குளங்களை நீங்கள் கண்டிருப்பீர்கள். நிரம்பி வழியும் குளம் ஊருக்கே அழகு. தண்ணீர்வற்றிப் போனால் அந்தக் குளத்தைக் கண்ணால் காண்பதும் அருவருப்பாக இருக்கும்.

சிற்றூர்களில் குளங்களைக் காண முடியும். தண்ணீர் நிறைந்திருக்கும்போது குளம் கண்ணுக்கு அழகாயிருப்பதோடு, மக்கள் விரும்பி வரும் இடமாகவும் விளங்கும். தண்ணீர் எடுக்கக் குடமேந்தி வருவர் பெண்கள். சிறு பிள்ளைகள் நீந்தி விளையாட அங்கே கூடுவர். துணி துவைக்கவும் உடல் குளிக்கவும் வருவர் பலர். மாலை நேரத்தில் குளத்தங்கரையில் அமர்ந்து வம்பளக்கலாம்; நல்ல காற்றை அனுபவிக்கலாம். தாமரை, அல்லி, செழுங்கழுநீர் இவற்றின் இலைகளும் பூக்களும் குளத்தின் நீர்ப் பரப்பைச் சித்திரம் தீட்டிய திரை போலத் தோன்றச் செய்யும். கலைஞர்களுக்கும் இனிய காட்சி.

நல்ல வேட்டைக் காடு

மனிதர்கள் மட்டுமா! பறவையினங்களும் நிரம்பியிருக்கும் குளத்தை வட்டமிடும். குளத்தில் வரிசை வரிசையாகச் செல்லும் வாத்துக்களைக் கண்டிருப்பீர்கள். தாமரை, குளம், அன்னப் பறவை மூன்றையும் இணைத்துச் சொல்வது கவிமரபு. காக்கை, புறா முதலிய எல்லாப் பறவைகளுக்குமே நீர்நிறைந்த குளம் நல்லவேட்டைக் காடு. பூத்த புது மலர்களில் தேனருந்த வரும் வண்டுகளின் ரீங்காரம் சுருதி கூட்டுவதுபோலக் கேட்டுக்கொண்டிருக்கும்.

இவையனைத்தும் குளம் நிறைந்திருந்தால்தான்! நீர் நிரம்பியிருக்கும் குளத்தின் கவர்ச்சியான காட்சி இப்படி.

ஆனால் மூதுரை நமக்கு நீர்வற்றிய குளத்தைக் காட்டுகிறது.

நீர் வற்றிய குளம் எப்படி இருக்கும்? வற்றிப் போன குளத்திற்கு நீங்களும் நானும் கண்டிப்பாகப் போகமாட்டோம். அங்கே என்ன வேலை நமக்கு?

தண்ணீர் இல்லாத குளத்தில் ஒருவிதமான கெட்ட வாடை அடிக்கும். அதை யாரும் அண்டமாட்டார்கள். தண்ணீரெடுக்க வரும் பெண்களையோ ஆட்டம் போட வரும் தம்பிமார்களையோ, காற்று வாங்க வரும் இளைஞர்களையோ வற்றிய குளத்தில் காணமுடியாது.

மனிதர்கள் மட்டுமென்ன? பறவைகள்கூட அக்குளத்தின் பக்கம் கால் வைக்கமாட்டா. தண்ணீர் நிரம்பியிருந்தபோது அங்கே நீந்தி நீந்திச் சிறகடித்துக்கொண்டிருந்த வாத்து, அன்னம் முதலிய நீர்ப் பறவைகள், வற்றிய குளத்தினைக் கண்ணால்கூடத் திரும்பிப் பார்க்கமாட்டா. நிரம்பிவழியும் குளங்களை நாடி அவை பறந்தோடிவிடும்.

வற்றிப் போன குளத்தினைப் பார்த்து ஔவையாருக்கு இரக்கம் பிறந்தது. அதனையே உற்றுக் கவனித்துக்கொண்டிருந்தார். அந்தக் குளத்தினை இப்போது யாராவது விரும்புகிறார்களா என்று அறிய அவருக்கு ஆவல். நிறைந்த குளத்தில் ஒட்டியிருந்த உயிர்களில்ஏதும், நீரில்லாத குளத்திலும் இருக்கின்றனவா என்று ஆராய்ந்தார். எல்லா உயிர்களும் மனிதர்களைப்போல பறவைகளைப்போல ஓடிவிட்டனவா அல்லது எஞ்சியிருப்பவை ஏதும் உண்டா என்று கண்ணோட்டமிட்டார் ஔவை மூதாட்டி.

வாடி வதங்கும் உயிர்க்குலம்

ஆம்! வறண்டு போன குளத்திலும், வாடிவதங்கிக்கிடக்கும் உயிர்க்குலம் இருக்கிறதென்று அவர் கண்டார். தண்ணீரின்றி ஒட்டி உலர்ந்து போன குளம்; அங்கே நீர் காணாமல் வாடி வதங்கிச் சாவை அழைத்துக்கொண்டிருப்பவை தாமரை, அல்லி, செழுங்கழுநீர் முதலான கொடிகள். வாழ்விலும் தாழ்விலும் குளத்தோடு ஒட்டியிருப்பவை அவை.

ஔவைப்பாட்டிக்கு நெஞ்சு உருகிவிட்டது. அல்லியின் இயல்பை எண்ணி எண்ணி மெய் சிலிர்த்தார். அவர் பரவசம் நமக்கு நல்ல கவிதையொன்றை அளித்திருக்கிறது.

அற்ற குளத்தின் அறுநீர்ப்
பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்
—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும்
நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு.

நீர்வற்றிய குளத்தைவிட்டுப் பறவைகள் ஓடிப் போய்விடும், அந்தப் பறவைகளைப்போலக் கேடு வந்த காலத்து நம்மை விட்டு நீங்கிவிடுவோர் உறவினர் அல்லர்.

நீர்வற்றிய பின்னரும் குளத்தில் ஒட்டி உலர்ந்து வாடும் அல்லி முதலிய கொடிகளைப்போல வாழ்விலும் தாழ்விலும் நம்மோடு இருப்போரே உண்மையான உறவினர்.

உறவுக்கு அருமையான இலக்கணம். வறுமை வந்தபோதும் சேர்ந்திருந்து துன்பம் அனுபவிப்போரே உண்மையான உறவினர்.

திருக்குறளும் இதே கருத்தை அருமையாக வலியுறுத்துகிறது:

பற்றற்ற கண்ணும் பழமை
பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள

பசையற்றுவிட்ட காலத்திலும் பழைய உறவுகளை நீடித்து வைத்திருக்கும் பண்பு சுற்றத்தார்களிடமே அதாவது உறவினர்களிடமே உண்டு.

உண்மையான உறவு வாழ்விலும் தாழ்விலும் நம்மோடு ஒட்டியிருக்கும். மரம் பழுத்தால்மட்டுமே ஓடிவரும் வெளவால்களைப்போல அவர்கள் செழிப்பின்போது சேர்ந்திருந்து வறுமையின்போது பிரியும் இரட்டை வாழ்வுக்காரர்களாக இருக்கமாட்டார்கள்.

வற்றிய குளத்திலும் நீரின்றி வாடி நலியும் அல்லிக்கொடி போன்றவர்கள் உண்மையான உறவினர், நிறைந்திருந்த குளத்தில் உயர்ந்திருந்தது அல்லி. "நீரளவே ஆகுமாம் நீராம்பல்" என்னும் மூதுரை வரி இதற்குச் சான்று. தண்ணீர் எந்த அளவுக்கு இருக்கிறதோ அந்த அளவுக்கு அல்லிக்கொடியும் வனப்பாக, வாளிப்பாக வளரும். தண்ணீர் குறையக் குறைய அதன் வாழ்வும் சுருங்கும். வற்றிய குளத்தில் அல்லி சாவை எதிர் நோக்கி நிற்கும் நிலைக்கு வந்துவிடும். மாதக் கணக்கில் மழையே இல்லாது போனால் அல்லிக்கொடி குளத்திலேயே உயிரைத் துறக்கும், வாடி அழியும்.

உறவுக்கு அருமையான உவமை

அல்லி நல்ல உறவுக்கு அருமையான உவமை வாழ்விலும் குளம், சாவிலும்குளம். இரட்டை வாழ்வு அதற்குக்கிடையாது. ஆற்றில் ஒரு கால் சேற்றில் ஒரு கால் என்னும் இரட்டை விசுவாசப் போக்கு அல்லியிடம் இல்லை. பற்றிய இடத்தைக் கடைசிவரை ஒட்டி நிற்கும். அதுதான் உண்மையான உறவு.

பலாப்பழத்தில் ஈ மொய்ப்பதைக் கேட்கவா வேண்டும்? பழுத்த மரத்தினை வெளவால் கூட்டம் முற்றுகையிடுவது இயல்பு. லட்டு வைத்திருக்கும் தட்டில் ஈயும் எறும்பும் மொய்க்கும்.

வெறுந் தட்டில் ஈ மொய்க்குமா! பழமில்லாத மரத்திற்கு வெளவாலோ கிளியோ வருமா? இனிப்பும் செழிப்பும் இருக்கும் காலத்துமட்டும் வருகின்றவர்களே உலகில் மிகுதி. அவர்கள் உண்மையான உறவினர் அல்லர்.

நிறைந்த குளத்தில் தேனுண்ண வரும் பறவைகளைப் போன்றவர்கள் அவர்கள். இரை தேட வரும் பறவைகள். இரையுள்ளவரையில்தான் இங்கே இருப்பார்கள். குளத்தில் நீர் வற்றிவிட்டால் பறவைகள் ஓடிவிடும்; அதுபோல வறுமைக் காலத்து நம்மை விட்டுப் பிரிந்துவிடுவார்கள் போலி உறவினர்கள்.

உண்மையான உறவினர்களைக் கண்டுகொள்ள உதவுவது வறுமை. வறுமைக் காலத்தில்தான் நாம் உண்மையான சுற்றத்தாரைத் தெரிந்துகொள்ளமுடியும். அவர்கள் நாம் துயர்ப்படும்போதும் நம்மோடு இருப்பார்கள். நம் துன்பத்தினை உடனிருந்து அனுபவிப்பார்கள். நம் இன்னலிலும் வறுமையிலும் தாமும் பங்குகொள்வார்கள்-வற்றிய குளத்தோடு வாடிவதங்கும் அல்லி, கொட்டி, நெய்தல் கொடிகள் போல.

குளம் போன்றது மனிதர்வாழ்வு. குளத்தில் எப்பொழுதும் நீர்நிறைந்திருக்காது. அதுபோல மனிதர் வாழ்விலும் செழிப்பும், சிறப்பும் என்றும் நிலவா. வாழ்வு ஒருகாலம், தாழ்வு ஒருகாலம். வளத்தை அனுபவிக்கும் நாம் வறுமையை அனுபவிக்கவும் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

— 7-ம் பக்கம் —

குஞ்சரத்தின் கதை

7

ஊருக்கெல்லாம் ஜோசியம் பார்த்து சொல்லிக்கொண்டு வந்த அவரால் தனக்கு எப்போது வயிற்று வலி தீரும் என்று கண்டுகொள்ள முடியவில்லை. இரவு நேரங்களில் அவர் துடிப்பார். கதறுவார். பரிதாபமாக இருக்கும். மலையாளத்திலுள்ள தெய்வங்களையெல்லாம் அழைப்பார். வேண்டிக்கொள்வார். பாவம்! பிழைக்க வழியில்லை.

ஒரு நாள்–அதாவது நான் இறந்ததற்கு முதல் நாள் இரவு வழக்கம் போல் ஜோசியருக்கு வயிற்றுவலி வந்துவிட்டது. கத்தினர். மலையாள மொழியில் ஏதேதோ சொன்னர். அதன் பிறகு அவரது கதறல் இல்லை. துடிப்பு இல்லை புலம்பல் இல்லை. மந்திரத்தைச் சொல்லித்தான் வயிற்று வலியை நிறுத்திவிட்டார் என்று நினைத்தேன். நான் பக்கத்து வீட்டுக்காரனுகையால் இரவு–சாமத்திற்கு மேல் அவரைப் பார்க்கப் போனேன். வீடு நிசப்தமாயிருந்தது. ஆருடக்காரர் அயர்ந்து தூங்குகிருர்போலிருக்கிறது என்று கதவிடுக்கல் வழியாக எட்டிப் பார்த்தேன். **பாவி தூக்குப் போட்டுக் கிடந்தான்.** மனிதர்களில் பெரும்பாலோர் வாழ்வுக்கும் சாவுக்கும் பெரும் பகை என்று கருதி எப்படியாவது உயிர் வாழத் துடிக்கிருர்கள், அல்லல் படுகிருர்கள். சிறை செல்லப் பயந்து கொடிய துயரங்களையும் தாங்கிக்கொண்டு தப்பிக்க நினைக்கும் திருடர்களைப்போல் மனிதர்கள் சாவுக்குப் பயந்து வாழ்க்கையில் பெருத்த கஷ்டங்களைத் தாங்கிக்கொள்ளத் தயாராகிவிடுகிருர்கள். ஆனல் எல்லோரும் அப்படியில்லை! வயிற்றுவலி ஜோசியன், சாவுக்குப் பயப்படுகிறவர்களுக்கு ஒரு பாடத்தைச் சொல்லிவிட்டுத்தான் செத்தான். தன்னை சிறையில் இன்பங் காணும் கைதியாகக் கூறிச் செத்தான்.

‘எந்த அமைதியான வாழ்க்கையைத் தேடி மனிதன் அலைகிருனே அந்த அமைதியான வாழ்க்கையை சாவு ஒன்றினலே தான் அடையமுடியும். கோடீஸ்வரனுனலும். கோவணுண்டியானலும் அவனுக்கு அவன் நெஞ்சம் உணரும்படியான அமைதி எந்த நாளும் கிடைக்காது. மனிதன் சாவிலே தான் வாழ்வைக் காண்கிருன். அமைதியைப்பெறுகிருன்.

—இப்படி ஒரு வாசகத்தைச் சுண்ணும்புக் கட்டியால் தரையில் எழுதிவிட்டு அந்த ஜோசியன் தொங்கினன்.

நான் கதவை உடைத்துக்கொண்டு உள்ளே போனேன். ஆஜானுபாவனுக இருந்த அவனை இறக்குவதற்குள் நான் பட்ட பாடு கொஞ்சமல்ல. அவனது வாயிலிருந்து நீர் வடிந்தது. கண்கள் பிதுங்கி இருந்தன. இடது கையிலே ஒரு தாயத்துக் கட்டியிருந்தான். நெற்றியிலே சந்தனப்பிறை—அது அன்று காலையில் வைத்ததுபோலும். மார்பிலே பச்சைக் கோடுகள் தென்பட்டன. கூர்ந்து கவனித்தேன். பத்து வருஷங்களுக்குமுன் நான் மலையாளத்தில் குத்திக்கொண்டு வந்த அதே புலிப்பச்சை! புலி பாய்வதுபோல் குத்தப்பட்ட பச்சை அது. ஒருவேளை நான் குத்திக்கொண்ட அதே பச்சைக் குத்தியிடம்தான் ஜோசியரும் குத்திக்கொண்டிருக்க வேண்டும். ஏனென்ருல் இரண்டு சித்திரங்களும் ஒரே மாதிரி இருந்தன. இந்த நேரத்தில் யாரோ என் வீட்டுக்கதவைத் தட்டினர்கள். நான் நடுங்கிப்போனேன். ஜோசியர் வீட்டுக்குள் இருந்தபடியே எட்டிப் பார்த்தேன். கதவைத் தட்டியது வேறு யாருமில்லை - பஞ்சவர்ணம்! அவனை அழைத்து விபரத்தைச் சொன்னேன்; அவன் ஒரு யோசனை கூறினன். ஜோசியரின் தலையை அப்புறப்படுத்திவிட்டு உடலில் பல இடங்களில் வெட்டுக் காயங்களை உண்டுபண்ணிப் போட்டுவிட்டால், மான்கொம்பு ஒழிந்தான் என்று சிங்கப்பெருமாள் மகிழ்வார். இறந்து கிடப்பது மான்கொம்புதான் என்று புலிப்பச்சை கூறும். பிறகு சிங்கப்பெருமாள் அலட்சியமாக இருப்பார். நாம் ஒளிந்திருந்து அவருக்குத் தொல்லை கொடுக்கலாம் என்ருன் பஞ்சவர்ணம். எனக்கு இந்த யோசனை பிடித்தமாகத்தானிருந்தது. ஆனல், பஞ்சவர்ணம் குஞ்சரத்தை ஏதும் செய்யக்கூடாது என்று சொன்னதை நான் ஏற்றுகொள்ளவில்லை. அவளையும் தூக்கிக்கொண்டு போய் விடலாம் என்றேன். மான்கொம்போ இறந்து கிடக்கிருன்; குஞ்சரத்தையோ ஆளைக்காணேம்–என்று சிங்கப்பெருமாள் குழம்பியே சாகவேண்டும் என்று நான் எடுத்துச்சொன்ன பிறகுதான் பஞ்சவர்ணம் ஒப்புக்கொண்டான். அதன்படி மலையாளத்து ஜோசியர் பிணத்தை என் பிணமாக்கினேம். முதலில் பிணத்தை சிங்கப்பெருமாளின் தோட்டத்துக்குள் போட்டுவிட்டு குஞ்சரத்தைக் கடத்துவதற்காக சிங்கப்பெருமாளின் மாளிகைக்குள் போனேம். மாளிகையின் உள் முற்றத்தில் ஒரு கொடிக்கயிற்றில் குஞ்சரத்தின் புடவை கிடந்தது. அவளைக் கடத்தும் முயற்சி ஒருவேளை தோல்வியடைந்துவிட்டால் அவள் என் பெயரை அம்பலகாரரிடம் கூறிவிடக்கூடாது. என்பதற்காக நான் அவள் அறைக்குப் பக்கத்தில் கூடப் போகவில்லை. பிணத்தைக் கட்டுவதற்காக வெளியில் காய்ந்துகொண்டிருந்த குஞ்சரத்தின் புடவையை மட்டும் எடுத்துக்கொண்டு தோட்டத்திற்கு வந்துவிட்டேன்.

விடியப்போகிற நேரம் வந்துவிட்டது. அதுவரை பஞ்சவர்ணத்தைக் காணவில்லை. அவன் சிங்கப்பெருமாளின் கையிலே அகப்பட்டுவிட்டான் என்றுதான் முதலில் நான் நினைத்தேன். பின் எதற்கும் மாளிகைக்குப் போய் பார்ப்போம் என்று எண்ணி திரும்பிப்போனேன். அங்கே குஞ்சரத்தின் அறை காலியாகக் கிடந்தது. அவளோ பேரழகி என்று சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவனே பருவஇளைஞன், எடுப்பான தோற்றமும் குறும்பான பேச்சும் கொண்டவன்..இப்படியெல்லாம்கூட நினைத்தேன். மாளிகை முழுதும் தேடினேன். எவ்வளவு நேரம் தேடுவது? அதற்குள் கிழக்கு வெளுத்துவிட்டது. தலையில் முக்காட்டைப் போட்டுக்கொண்டு சோலையாண்டவர் கோயில் திசையை நோக்கி நடையைக் கட்டினேன். அதிலிருந்து எனக்கு நிம்மதியில்லை. மானத்தை இழந்ததோடல்லாமல் நம்பிக்கை மோசத்திற்கும் ஆளாகிவிட்டோமே என்று கவலைப்பட்டுக்கொண்டே இருந்தேன். குன்னக்குடிக்குமேற்கே சுமார் நான்கு கல் தொலைவில் **தேனுச்சி அம்மன் கோயில்** என்று ஒரு கிராமம் இருக்கிறது. அவ்வூரில்தான் என் தாயார் பிறந்தார்கள் இத்தனை நாட்களாக அங்குதான் தலைமறைவாக இருந்தேன். என் பாட்டிக்கு இந்த விவகாரங்களெல்லாம் தெரியாது. அதனுல்தான் நான் அந்தக் கிழவியிடம் தைரியமாகப் புழங்கமுடிந்தது.

திடீரென்று மூன்று நாட்களுக்கு முன்பு எனக்கொரு தகவல் கிடைத்தது. பஞ்சவர்ணம் குஞ்சரத்தை பிரான்மலைக் கோயிலில் ஒளித்து வைத்திருப்பதாகத் தெரிந்தது. இரவு நேரங்களில் அவர்கள் மலையடிவாரத்திற்கு வருவதாகவும் மற்ற நேரங்களில் கோயிலுக்குள்ளேயே பதுங்கி இருப்பதாகவும் அறிந்தேன். தகவல் கிடைத்த அன்று இரவே சூரைக்குடிக்குப் போனேன் என்னுடைய ஊரில், நான் பிறந்த ஊரில், நான் பயந்துகொண்டு மறைந்து மறைந்து போக வேண்டிய நிலை ஏற்படுமென்று நான் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. வயல், வாய்க்கால், வீடு, கடை–எங்கு பார்த்தாலும் என்னைப்பற்றியே பேசிக்கொண்டிருப்பதை நான்நேரில் கண்டபோது உள்ளபடியே நான் காரணமில்லாமல் அழத் தொடங்கிவிட்டேன். ஒரு மனிதன் இறந்துவட்டால் எல்லோரும் அவனைப் புகழ்கிருர்கள். அவனது கெட்ட குணங்களை மறந்துவிட்டு அவனது நற்செயல்களைக் கூறியே பாராட்டுகிருர்கள். எத்தனையோ முறை சிங்கப்பெருமாளின் சொல்லை நம்பி பலபேரை புளியவிளாறு கொண்டு அடித்திருக்கிறேன் எத்தனையோ பேரை அபராதம் கட்டவைத்திருக்கிறேன். அவர்கள் எல்லாம் என்மேல் உள்ள கோபத்தை மறந்து நான் கொலையுண்டதற்கு அனுதாபம் தெரிவித்துப் பேசிக்கொண்டதை நான் நேரில் கேட்டபோது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. மனிதர்கள் எல்லோரும் நல்லவர்கள்தான் ஆனல் அவர்கள் உணர்ச்சி வசப்படும்போதுதான் கெட்டுவிடுகிருர்கள் அவ்வளவுதான்.

ஊர் உறங்கிவிட்டது. யாரோ ஐந்தாறு பேர் சேரியில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில், நான் தேடிச்சென்ற **அல்லிவேலுவும்** இருந்தான். அல்லிவேலு பொல்லாத போக்கிரி வலிச்சண்டைக்குப் போய் தகராறுகளை இழுத்துக்கொள்வதில் மன்னுதி மன்னன். ஆனல் அவன் என்னவோ என்னிடம் பயபக்தியுடன் நடந்துகொண்டு வந்தான். அவன் பெயர் வேலு. தெருக்கூத்துகளில் அல்லி வேடம் தாங்கித்தாங்கி எல்லோரும் அல்லிவேலு அல்லிவேலு என்றே அழைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. நான் ஒரு பூவரசமரத்து மறைவில் நின்றுகொண்டே இருந்தேன். செத்துப்போன மான்கொம்புக் கள்ளனின் கீர்த்தியைப் பற்றியும் சிலம்பாட்டத்தையும் பேசிக்கொண்டிருந்துவிட்டு அந்த மகாநாடு கலைந்தது. அல்லிவேலு வீடு போகும்வரை நான் அவன் பின்னுடியே சென்று அவன் உள்ளே சென்றதும் அவனைக் கட்டித் தழுவிக்கொண்டு அழத் தொடங்கிவிட்டேன். முதலில் அல்லிவேலு, என்னை யாரோ எதிரி என்று கருதி மல்யுத்தம் புரிபவனைப்போல் திமிறினன். ‘நான்தான் அல்லிவேலு மான்கொம்பு’ என்றதும், வழக்கமாகக் குடித்துவிட்டு வரும் கணவனை அன்று குடிக்காமல் நல்லவனுகக் கண்ட மனைவியைப்போல் கண்ணீர்வடிக்கஆரம்பித்தான்அல்லி அது ஆனந்தக் கண்ணீர். கதையை அவனிடம் விரிக்காமல், பிரான்மலைக் கோயிலில் பஞ்சவர்ணம் மறைத்து வைத்திருக்கும் குஞ்சரத்தை எப்படியும் தூக்கி வந்துவிட வேண்டும் என்று கூறினேன். அவனும் சரி என்று சொன்னுன். பொன்னமருவதிக்குப் பக்கத்தில் ஒரு கிராமத்திற்கு இன்றிரவே கொண்டு வருவதாக நேற்றுச் சொன்னுன். அநேகமாக அவன் வெற்றியோடு வந்திருப்பான். நான் நாளை இரவு அங்கு போக வேண்டும்.”

—மான்கொம்பு இந்த இடத்தில் கதையை நிறுத்தினன். ஜமீன்தார் சிரித்தபடி,

“மான்கொம்பு உனக்குத் தவருன செய்தி கிடைத்திருக்கிறது. பிரான்மலைக் கோயிலில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது குஞ்சரமல்ல. இப்போது நான் பொன்னமருவதியிலிருந்துதான் வருகிறேன். நீ சொன்ன அந்தக் கிராமத்தில் ஒரு வாலிபனுல் கவரப்பட்டு வந்திருப்பது குஞ்சரமல்ல. வேறு பெண். பெயர் கண்ணம்மா!” என்ருர் ஜமீன்தார்.

“என்ன குஞ்சரமில்லையா? உங்களுக்கு குஞ்சரத்தை நன்ருகத் தெரியுமா? தவருகச் சொல்கிறீர்கள். அவள் குஞ்சரமேதான். அல்லிவேலுக்கு குஞ்சரத்தை நன்ருகத் தெரியுமே!’ என்று அடித்துப் பேசினுன் மான்கொம்பு.

ஜமீன்தார் அந்த ஊரிலிருந்துவந்து ஒரு நாழிகைகூடச் சரியாக ஆகவில்லை. மான்கொம்பு அவரை இழுத்துக்கொண்டு அந்தக் கிராமத்திற்குப் புறப்பட்டான்.

- தொடரும் -

கறுப்புக்கொடி வழக்குநிதி சிறப்புக்கூட்டம்

13-4-58 ஞாயிறு காலை 9-மணிக்கு

செயின்ட்மேரீஸ் மண்டபத்தில்

தலைவர்: என். எஸ். மூர்த்தி,

அறிஞர் அண்ணு, M.A., M.L.A.

திரு. க. அன்பழகன், M.A., M.L.A.

பேசுவர்.

பொருள்: “அரசியல் கட்சிகள்”

நன்கொடை: ரூ. 2 & 1

மஜீத் படிப்பகம், வட்டம் 39, சென்னை-2.

“இலட்சியவாதி”

திங்களிருமுறைத் தமிழ் ஏடு–கன்னித்தமிழ் நடை–கனிக்கவிதை பல–இலக்கியத் தேனருவி – சிறப்பாகத் தொழிலாளர் தம் உரிமைக் குரலாய்–மே திங்கள் 15–ந் தேதி முதல் வெளிவரும்.

கௌரவ ஆசிரியர்

நாஞ்சில் கி. மனோகரன், M.A.

8–பக்கங்கள் விலை 13 காசு.

ஏஜெண்டுகள் தேவை.

விபரங்களுக்கு:–

நிர்வாகி, இலட்சியவாதி,

1, வெள்ளாளத் தெரு, சென்னை–7.

அத்திப் பழம்

மா. சி. தசரதன் எம்.ஏ.

- 19 -

"வள்ளியைத் தான் ஏற்பாடு செய்யலாம் என்று எண்ணுகின்றோம்" என்றார்கள்.

"அதற்கெல்லாம் இப்போதென்'மா அவசரம். பிறகு பேசிக்கொள்ளலாம். நீ முதலில் குழம்பு ஊற்று" என்று இலையில் சோற்றைப் பங்கிட்டான்.

"இப்போதைக்கு இவன் இந்த அளவுக்கு இணங்கியதே போதும்" என்று எண்ணியது போல் சிவகாமி அம்மாள் திருமணப் பேச்சை அதோடு நிறுத்திவிட்டார்கள்.

தாயார் தன் திருமணப் பேச்சை எடுத்ததும் ஞானசம்பந்தனின் உள்ளத்தில் பலவகை போராட்டங்கள் எழுந்தன. யாரும் அறியாமல் அமுதவல்லியுடன் வாழுவதா அல்லது அவள் உறவை அறுத்துக் கொண்டு அம்மா சொல்லும் பெண்ணின் கழுத்தில் தாலியை முடிந்துவிடுவதா என்று எண்ணினான். அமுதவல்லியின் உறவை அறுத்துக் கொள்ள வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் என்று நினைத்தான். அது ஒன்றும் முடியாத செயல் அல்ல. அந்தப் பக்கமே போகாமல் இருந்தால் போதும். ஆனால் அதற்குப்பின் அமுதவலலி என்ன ஆவாள் என்று எண்ணியபோது ஞானசம்பந்தனின் மனம் கலங்கியது.

அமுதவல்லியுடன் அவன் பழகிய பழக்கம் உடல் இன்பம் தந்து வெறி தணிக்கும் பழக்கமாக மட்டும் இருக்கவில்லை. அவளோடு சேர்ந்து எத்தனையோ கனவுகள் கண்டான்; எத்தனையோ அமைதிபெற்றான்.

அவள் அடிவயிற்றில் வளரும் அந்தச் சின்ன உடலைக் கண்டு களிக்கவேண்டும் என்று எவ்வளவு ஆவல் கொண்டிருந்தான். என்ன பெயர் வைப்பது என்று கூட அவர்கள் கூடிக் கலந்து பேசியிருக்கின்றனர்.

இந்த இன்ப நிகழ்ச்சிகளை எல்லாம் நினைவு கூர்ந்தவுடன் இவற்றை இழக்க ஞானசம்பந்தனின் உள்ளம் ஒருப்படவில்லை.

இன்னும் ஒருவகையில் அமுதவல்லியை அவன் கைவிடமுடியாதவனானான். ஞானசம்பந்தன் வரவில்லை. என்று தெரிந்தால் போதும்அருணாசலம் அச்சுறுத்துவான் மறுபடியும் அவளை ஒய்யார விலாஸ் மாடிக்கு அழைத்துப் போய் 'வியாபாரம்' செய்வான்.

இதை கற்பனை செய்ததும் ஞானசம்பந்தனின் உள்ளத்தில் ஏதோ புண்பட்டதுபோல் இருந்தது. அந்த நிலைமையில் அமுதவல்லியின் அழகிய முகத்தில் அழுகை அல்லவா குடிபுகும் என்று எண்ணியவுடன் அந்தப் புண்ணிலிருந்து குருதி வடிந்து துன்புறுவதுபோல் எண்ணினான்.

இந்த எண்ணம் வந்ததும் அமுதவல்லியைக் காணவேண்டும் என்ற ஆவல் அவன் உள்ளத்தில் மிகுந்தது. விடுமுறையோ இன்னும் இரண்டு மூன்று கிழமைகள் இருந்தன. என்ன காரணம் சொல்லி ஏய்ப்பது என்று எண்ணினான்.

ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி சென்னைக்கு மறுநாளே பயணமாகிவிட்டான்.

அவனைக் கண்டதும் அமுதவல்லி அடைந்த இன்பத்திற்கு எல்லையே இல்லை என்று சொல்லலாம். அவனும் அவ்வாறே அவளிடம் தன் ஆசை அத்தனையையும் பரிமாறிக் கொண்டான்.

முன்னைக்கு இப்போது அமுதவல்லியின் உடலில் அழகு மிகுந்திருப்பதுபோல் ஞானசம்பந்தனின் கண்களுக்கு ஒரு தோற்றம் புலனாகியது.

இரண்டு மூன்று கிழமை விடுமுறையும் பார்த்துக்கொண்டே இருக்கும்போதே தண்ணீரில் கரையும் சர்க்கரையைப்போல் கழிந்துபோய் விட்டன.

அமுதவல்லியின் உடல்நிலையும் நாளுக்குநாள் மென்மை பெற்று வந்தது. உட்கார்ந்து எழும்போதெல்லாம் பெருமுயற்சி செய்ய வேண்டியதாயிற்று. நடப்பது சுமையாகவே இருந்தது எனலாம்.

மீண்டும் விடுமுறை கழிந்து கல்லூரி தொடங்கப் பெற்றது. இரை தேடி எங்கெங்கோ அலைந்த புட்கள் எல்லாம் இரவில் கூடு நோக்கி வந்திடுதல் போல் விடுமுறையில் எங்கெங்கோ சென்றிருந்த மாணாக்கர்கள் கல்லூரிக்கு வந்து சேர்ந்தனர். புதிய உலகம் கண்டவர்கள்போல் ஒருவர்க்கொருவர் புதிய செய்திகளை எடுத்துப் பேசிக்கொண்டனர்.

'என்னப்பா நிரம்ப மகிழ்ச்சியாக இருக்கிறாய். ஆகிவிட்டதா அது?' என்று சில மாணவர்கள் வேறு சிலரைப் பார்த்துக் கேட்டனர். "என்ன நண்பரே சொல்வது உனக்குத் தெரிகின்றது என் நிலைமை. என் பெற்றோருக்கு எங்கே புரிகின்றது... அடுத்த ஆவணிக்குப் பார்த்துக் கொள்ளலாம்" என்று சொல்லி விட்டார் என் தந்தை என் மாமாவிடம் என்று சிலர் விடை பகன்றனர். 'என்ன ஒரேயடியாகப் பருத்துவிட்டாய்?' என்று ஒருவன் கேட்டதும் 'நீ என்ன புடலைப்போல் இருப்பதாக நினைப்போ?' என்று பிறிதொருவன் விடை சொல்வதுமாக முதல் நாள் கலகலப்பாக இருந்தது. ஆனால் ஞானசம்பந்தன் மட்டும் இந்த கலகலப்பில் கலந்துகொள்ளாமல் கவலை கொண்ட தோற்றத்தோடு காணப்பட்டான். 'ஏன்' என்று கேட்ட இரண்டொருவர்க்கு 'என்னமோ' என்று சொல்லி அனுப்பினான்.

"வேறு ஒன்றுமில்லை"பா நண்பன் ஏகாம்பரத்தைக் காணவில்லையே என்ற கவலை அவனுக்கு" என்றான் ஒருவன்.

ஞானசம்பந்தனும் ஏகாம்பரத்தைப்பற்றி அப்போதுதான் நினைத்தான். ஆமாம் அவனைக் காணோமே என்று எண்ணினான். இதற்குள் வேறு ஒருவன்.

"அவன்தான் சரியான ஆள் ஐயா படித்துப் படித்துப் பார்த்தான் படிப்பு வரவில்லை. பேசாமல் திருமணம் செய்துகொண்டான்" என்றான்.

"மெய்யாகவா" என்றான் வேறொருவன்.

"ஏன் உனக்கு அழைப்பு வரவில்லையா?" என்றான் ஒருவன்.

'எனக்கு எங்கே ஐயா அவன் அனுப்புவான். ஒருவேளை ஞானசம்பந்தனுக்கு அனுப்பியிருப்பான்" என்றான்.

இவர்களிடமிருந்து விலகிச் சென்றால் போதும் என்று இருந்தது. அவனுக்கு அதனால்.

"ஆமாம் வந்தது" என்றான். அவன் நினைத்தது. ஆமாம் என்றால் அவர்கள் போய்விடுவார்கள் என்று எண்ணினான். ஆனால் அவர்களோ பேச்சுக்குப் புதிய தலைப்பு கிடைத்தது என்று மகிழ்ச்சி அடைந்தார்கள். மூலைக்கொருவராக ஏதேதோ கேட்டனர்.

"பெண் எந்த ஊர்?"

"கருப்பா–சிகப்பா?"

"நீ போனாயா திருமணத்திற்கு" என்று பல கேள்விக் கணைகளைத் தொடுத்தனர்.

என்ன சொல்லுவது என்று அறியாமல் சற்று நேரம் திகைத்தான் ஞானசம்பந்தன். சரி பிறகு சொல்லுவதாகச் சொல்லலாம் என தீர்மானித்துக் கொண்டு "ஒரே தலைவலியாக இருக்கிறது. பிறகு சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டுத் திரும்பினான்.

திரும்பினவன் திகைத்துவிட்டான். கல்லூரி வாயிற்படியில் பெரியசாமி வருவதைக் கண்டவன் திகைத்து என்ன கேட்பாரோ என்று எண்ணியவனாய் அங்கிருந்து மெல்ல அவரை நோக்கி நடந்தான்.

"வருவதாகச் சொல்லவே இல்லையே அப்பா"

"வேறு வேலை இருந்தது. அப்படியே உன்னையும் பார்த்துக் கொண்டு போகலாம் என வந்தேன். கல்லூரி இன்று திறந்தாயிற்று–சரி வா விடுதிக்குப் போகலாம்' என அவனை அழைத்துக் கொண்டு விடுதிக்குப் போனார்.

★

அருணாசலம் அன்றுமுழுவதும் ஒரு அவசரசெலவுக்காகப் பணத்தைத் தேடினான். தேடினான் என்றால் வீட்டைவிட்டுவெளியே எங்காவது போய் வேலை வெட்டி செய்து சம்பாதித்தான் என்றோ, கடனோ கைமாற்றோ வாங்க எண்ணினான் என்றோ எண்ணி விடுதல் கூடாது அந்தப் பழக்கமெல்லாம் அவன் அறியாதன. ஞானசம்பந்தனின் நட்பு ஏற்பட்ட நாளிலிருந்து, கையை நீட்டினால் கொடுப்பதற்கென்று ஞானசம்பந்தன் இருக்கிறான் என்று முடிவு கட்டிவிட்டான். ஆனால் நீட்டிய கையில் ஏதாவது வைத்துச்செல்லும் ஞானசம்பந்தன் இரண்டொரு நாட்களாக வராமற் போகவே இருப்புக்கு வறட்சி வந்துவிட்டது. ஆகவே கூடத்து மாடம், உள் அலமாரி ஆகிய இடங்களில் ஏதாவது சில்லறையாவது கிடைக்குமா என்று துருவினான். ஒன்றும் கிடைக்கப் பெறவில்லை.

அமுதவல்லியின் கைப்பெட்டியைத் திறந்து துணிகளின் கீழே பார்த்தான் ஒன்றும் கிடைக்கப் பெறவில்லை.

"என்ன தேடுகிறாய்?"என்று கேட்டாள் அவள்.

"ஆமாம் சொன்னால் உடனே கொடுத்து விடுவாள் இவள். இவளிடம் சொல்லித்தான் தீர வேண்டும்" என்று தனக்குத் தானே முணு முணுத்தவாறு வெளியேறினான்.

சற்றுப் பொறுத்து அமுதவல்லியை அழைத்து 'நான் வெளியில் போகின்றேன் விழிப்பாக இரு' என்று எச்சரிக்கை விடுத்துவிட்டு படிகளில் இறங்கினான்.

"எங்கே போகிறாய்?" என்றாள் அமுதவல்லி.

"எங்கேயோ உனக்கென்ன" என்று சொல்லிக்கொண்டே அவன் நகர்ந்தான். அதற்குமேல் அவனைக் கேட்டு ஒன்றும் பயனில்லை என்று அவள் மெல்லச் சுவரைப் பிடித்துக்கொண்டு உள்ளே போனாள் :

உள்ளே போனாளே தவிர அவள் உள்ளத்தில் அமைதி இல்லை. இந்தப் பாவி பணம் பணம் என்று ஆலாய்ப் பறக்கின்றான். இங்கே அவன் கண்ணில் சல்லியும் படவில்லை. அதைத் தேடிக்கொண்டு புறப்பட்டுவிட்டானே. எங்காவது போய்த் தொலைந்தால் பரவாயில்லை. நேரே அங்கே போய் விட்டால் என்ன செய்வது?' என்று குழம்பினாள்.

'அங்கே' என்று அவள் அஞ்சிய இடம் வேறு எங்கேயும் அல்ல. ஞானசம்பந்தன் இருப்பிடம்தான். எப்படியோ ஒரு முறை அவன் போகின்றபோது பின்னோடே போய் அவன் இடத்தைத் தெரிந்துகொண்டு வந்துவிட்டான் அருணாசலம்.

தொடரும்

பத்திரப் படைப்பு: 2

முன்ஷியின் மிருணாலவதி

கண்ணதாசன்

- 4 -

'இருக்கலாம், என்னை எந்தப் பாதையில் கூட்டிப்போக வந்திருக்கிறாய்?

'களங்கமற்ற வாழ்க்கையின்-'

'களங்கமற்ற வாழ்க்கை! மிருணாலவதி! தம்மிடத்துக் களங்கம் இருப்பதை அறிந்தவர்கள்தான் களங்கமற்றவர்களாக வேண்டும். நீ எனக்கு என்ன சொல்லித்தருவாய்? நீ அரசகுமாரி; பாதுகாப்புடைய மாளிகையில் வளர்ந்தவள்; தான் மிகச் சக்தியுடையவள் என்று எண்ணிக்கொண்டவள்; வைராக்கியச் செருக்குக் கொண்டவள்; எனக்குச் சொல்லித் தருவதற்கு உன்னிடம் என்ன இருக்கிறது?' என்று மிகவும் மமதையுடன் கூறி நகைத்தான் முஞ்சன்.

'புத்தி இருந்தால் ஒவ்வொரு மனிதனும் கற்கமுடியும்.'

முஞ்சன் மறுபடியும் சிரித்தான்.

''எனக்குப் புத்தி இருக்கிறது; ஆனாலும், உன்னால் சொல்லித்தர முடியாது. துக்கம் கொண்டவனும், பக்குவம் அடையாதவனும் கற்கலாம். என்னைத் துக்கம் தொடவும் செய்யாது; அபக்குவம் என்ற பேச்சே எனக்குத் தெரியாது; நீ எனக்கு என்ன உபதேசம் செய்வாய்? நான் கற்கவேண்டியது ஒன்றும் பாக்கியில்லை!''

'என்ன செருக்கு!'

'நீ என்ன சொன்னாலும் சரிதான். உனக்கு என் கதை தெரியுமா? நான், ஓர் அநாதையின் புறக்கணிக்கப்பட்ட புத்திரன்; ஆனால், இன்றைக்குப் பிருதிவிவல்லபன். பெண் சிங்கங்கள் எனக்குப் பால் ஊட்டியிருக்கின்றன. யானைகளோடு நான் விளையாடியிருக்கிறேன்; தெருத்தெருவாகத் திரிந்து பிச்சை எடுத்திருக்கிறேன்; சிம்மாசனங்களைத் தானம் செய்திருக்கிறேன்; துக்கம் கொண்டவர்களுக்காக என் உடலையே அர்ப்பணம் செய்திருக்கிறேன்; சுகத்தில் ஆழ்ந்தவர்களின் சரீரத்தை வெட்டித் துண்டாக்கியிருக்கிறேன்; பெண்களின் அழகுக் களஞ்சியங்களைக் கொள்ளையடித்திருக்கிறேன்; மகாலக்ஷ்மி போன்ற மெல்லியலாரைச் சிரச்சேதம் செய்திருக்கிறேன்; வேத வாக்கியங்கள் ஓதித் தேவர்களாலும் முடியாத தவம் செய்திருக்கிறேன்; சிருங்கார சூத்திரங்களையும் பாராயணம் பண்ணி இன்பரஸத்தைப் பருகியிருக்கிறேன்! இன்னும் என்ன பாக்கி?'

வார்த்தைகளை உச்சரிக்கும்போது பிரகாசித்த பல்வரிசைகளால் ஒளி பெற்ற அவன் முகம், மழைக்காலத்து மாலையைப்போல் இருதயத்தை ஊடுருவும் சக்தி பெற்றுக் காணப்பட்டது. மறுபடியும் அவன், 'மிருணாலவதி! இவற்றையெல்லாம் அனுபவித்த நான் சுகமாகவே இருக்கிறேன். என் இருதயத்தில் களங்கம் இருப்பதாகவே எனக்குத் தோன்றவில்லை. நீ எனக்கு என்ன சொல்லித் தரப்போகிறாய்?' என்று கேட்டான்.

மிருணாலவதியால் பதிலளிக்க முடியவில்லை; தொண்டை அடைத்துக்கொண்டது; ஆராய்ச்சி செய்யும் புத்தியின் கூர்மை மழுங்கிவிட்டது. மீண்டும் அன்புகனிந்த குரலில் முஞ்சன் கூறினான்: 'கற்கவேண்டியவள் நீ. நீ, இன்னும் வாழ்க்கையின் ஆனந்தத்தை அநுபவிக்கவில்லை; புஷ்பசயனத்தின் ரகசியத்தை அறியவில்லை; ரஸத்திலும் கேளிக்கையிலும் மயங்கித் திளைக்கக் கற்கவில்லை. நீ கற்க வேண்டியவை மிக அதிகமாகவிருக்கின்றன.'

கோபத்துடன் கைகளை உயரத் தூக்கினாள் மிருணால். முஞ்சன் அதைக் கவனியாது தொடர்ந்து சொன்னான். 'யாராவது ரஸிகனின் படுக்கையில் - மெல்லிய ஆடை அணிந்து—'

மிருணால் பல்லைக் கடித்தாள். 'அட பாவி!'

முஞ்சன் சிரித்துக் கொண்டே எழுந்து மிருணாலின் அருகில் வந்து நின்றுகொண்டு, ரஸக்கடலைக் கடைந்தால் என்ன கிடைக்கும் என்பதை நீ கற்கவேண்டும்!'

'சண்டாளா! வெட்கங்கெட்டவனே! நாளைக்குக் காலையிலே பார்-'

'சரி, நீயும் நாளைச் சாயங்காலம் பார்! உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன்!' என்றான் முஞ்சன்.

'என் வரவையா?'

'ஆம், நான் சொன்னவற்றையெல்லாம் உனக்குச் சொல்லித்தர வேண்டாமா?'

'துஷ்டா! உன் நாக்கை—'

முஞ்சன் அமைதியாகவே கூறினான்: 'என் நாக்கு உன்னைப்போன்ற பல மானினிகளை வசப்படுத்தியிருக்கிறது. பிருதிவிவல்லபனின் இருதயத்தோடு உன் இருதயத்தைக் கலப்பதைத் தவிர உனக்கு வேறு வழி கிடையாது.'

கோபக்கினியில் வெந்துகொண்டிருந்த அவள் முஞ்சனை ஓங்கி ஓர் அறை அறைந்தாள். அவன் 'கலகல' வென்று சிரித்தான். திடீரென்று தன் கைகளால் மிருணாலின் கையைப் பிடித்து முத்தமிட்டான்.

தேள் கொட்டிவிட்டதுபோல் மிருணால் கூக்குரலிட்டாள். அவள் விழிகள் விரிந்தன; அங்கங்கள் பதறின.

எதிரில் அமுதம் பொழியும் கண்களுடன் சிரித்துக்கொண்டு நின்றான் முஞ்சன்.

'யார் அங்கே?'

ரணமல்லன் ஓடிவந்தான்.

'இந்தப் பாவியின் கைகளை ஏன் கட்டவில்லை?'

கோபங்கொண்ட மிருணால் குரூரமாகப் பார்த்துக்கொண்டே இருந்தாள். ரணமல்லனும் மற்ற வீரர்களும் முஞ்சனின் கைகளுக்கு விலங்கு போட்டார்கள்.

'ரணமல்லா! இந்தப் பாவி என் கையைத் தொட்டுவிட்டான்! இவன் கையில் சூடு போடவேண்டும்!'

படைத்தலைவன் வியப்படைந்து 'இப்போதேயா?' என்று கேட்டான்.

அதிகப்பிரசங்கித்தனமான அந்தக் கேள்வியைக் கேட்டு, 'என்ன?' என்று கர்சித்தாள் மிருணால்.

ரணமல்லன் நடுங்கிவிட்டான். ஒரு ஈட்டியை எடுத்துத் தீவட்டியில் காய்ச்சினான்.

'ஏன் இவ்வளவு தாமதம்?'

'இதோ!' என்று கூறிய ரணமல்லன், போர்வீரர்கள் பக்கம் திரும்பி, 'அவன் கையைப் பிடியுங்கள்!' என்றான்.

'மிருணாலவதி! ஏன் வீணாகக் கஷ்டப்படுகிறாய்? நீ தொட்டதாலேயே அங்கங்கள் எரிந்துகொண்டிருக்கின்றன. வேறு நெருப்பே தேவையில்லை?' என்று இனிய குரலில் கூறினான் முஞ்சன்.

மிருணால், ரணமல்லனிடம், 'உம்!' என்று வேகப்படுத்தினாள்.

போர்வீரர்கள் முஞ்சனின் விலங்கு தரித்த கைகளைப் பிடிக்கப்போனார்கள். ஆனால், நீண்டநேரம் அவர்களை அவன் சிரமப்படுத்திவிட்டான்.

உதட்டைக் கடித்துக்கொண்டு மிருணாலவதி, 'கோழைகளே! பேடிகளே! அவன் கையில் சூடு போடாவிட்டால், இதோ, இப்பொழுதே உங்களையெல்லாம் வதை செய்துவிடுவேன்!'

பயத்தால் துணிவடைந்த போர்வீரர்கள் முஞ்சன் கைமீது பாய்ந்தார்கள். மிகவும் சிரமப்பட்டு வலது கையைப் பிடித்துக்கொண்டார்கள். இந்த முயற்சியில் தங்களுக்கு ஏற்பட்ட சிரமத்தால் போர்வீரர்கள் களைப்படைந்தும் முஞ்சன் சிரித்துக்கொண்டேயிருந்தான்.

ரணமல்லன், காய்ச்சிய ஈட்டியை அவன் கைமீது வைத்தான். முஞ்சன் ஒன்றும் பேசவில்லை. மாமிசம் எரியும் நாற்றம்...முஞ்சன் தன் கை சுடப்பட்டதைச் சிறிதும் கவனியாதவனாய் வேறு யாருடைய கையோ சூடுண்டதைப்போல் அலட்சியமாக மிருணாலையே பார்த்துக்கொண்டிருந்தான். எரியும் மாமிச நாற்றத்தை முகர்ந்த மிருணால், 'போதும்!' என்றாள். முஞ்சன் முன்போலவே சாந்தமாக—ஆனால் கொஞ்சம் வெறுப்புடன், 'இவ்வளவுதானா? இவ்வளவோடு உனக்குத் திருப்தி ஏற்பட்டுவிட்டதா? நீ விரும்பினால் என் கையையே எரித்துக் கொண்டிருப்பேனே!' என்றான்.

பதில் ஒன்றும் சொல்லமுடியாதவளாய் மிருணால் திரும்பினாள்.

'மிருணாலவதி! இந்தக் காயத்துக்கு மருந்து போட நாளைக்குக் கட்டாயம்!' என்றான் முஞ்சன்.

வெறிகொண்ட அவளுக்குத் திரும்பிப் பார்க்கவும் பொறுமை இல்லை; வேகமாகப் போய்விட்டாள்.

- தொடரும் -

வெண்பாப் போட்டி-15.

ஈற்றடி :

நேரத்தால் நோகுதே நெஞ்சம்.

முடிவு தேதி 19-4-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

போர்ப்பரணி இசைப்பீர்!

— துறையூர் ந. அலி —

செங்குருதி வடிகின்ற விழுப்புண்ணைக் கண்டு
சிந்தாதே கண்ணீரை என்னருமைத் தோழா!
வெங்கொடுமைச் சாக்காட்டில் கால்வைத்த வாறு
வெற்றிபெறப் போராடும் செந்தமிழர் நாட்டில்
செங்குருதி பாயட்டும் அதைக்கண்டு மக்கள்
திருவிழிகள் திறக்கட்டும், சிங்கம்போல் புலிபோல்
அங்கையிலே வாள்தாங்கி வேல்தாங்கிச் சென்று
அமர்க்களத்தில் உரிமைப்போர் புரியட்டும் இன்று.

பொன்மீது பொருள்மீது பேராசைக் கொண்டு
பெருநாட்டின் வீரத்தை விலைகூற வேண்டாம்
இன்னுயிரை ஈந்தேனும் தமிழ்நாட்டிற் குற்ற
இடர்நீக்கித் தமிழ்க்கொடியின் மானத்தைக் காப்பீர்
பொன்னாட்டின் விடுதலைக்குத் தம்முயிரை ஈந்துப்
போரிட்ட வீரகுலம் சீரடையும் வண்ணம்
இந்நாளில் வாளாண்மை காட்டிடுவீர், மக்கள்
இருள்சூழ்ந்த இதயத்தில் விளக்கேற்றி வைப்பீர்.

தன்னாட்சி தன்னுரிமை தன்மானம் என்னும்
தங்கநிகர் எண்ணங்கள் மக்களுள வயலில்
நன்றாக வேர்விட்டு செழிப்பாக வளர
நல்லவிதை விதைத்திடுவீர் முன்னோர்கள் சென்ற
பொன்னடியைப் பின்பற்றித் தாய்நாட்டின் உரிமை
பிறப்புரிமை என்றெண்ணி மலைபோன்ற இன்னல்
முன்னின்று தடுத்தாலும் மலைக்காது வென்று
முழங்குகடல் ஞாலத்தில் போர்ப்பரணி இசைப்பீர்!

திருநாட்டின் விடுதலைப்போர் மலர்க்கட்டில் அல்ல
தேனளந்த மேனியரின் மென்மடியும் அல்ல
செருமுனையில் நடுமார்பில் வேல்தாங்கி மடியும்
தியாகத்தின் பெரும்பணியே சந்தேக மில்லை
பெருந்துன்பத் திரைமறைவில் பேரின்பப் புதையல்
புவிமீது மறைந்துளதென் றான்றோர்கள் உரைப்பர்
இருளின்றேல் ஒளியில்லை அதுபோல இன்னல்
ஏந்தாத கரங்களுக்கும் விடுதலையே இல்லை.

ஆவிவுடல் பொருளெல்லாம் துச்சமென மதித்து
அருஞ்சிறையில் அடைப்பட்டார் முன்னோர்கள் என்றால்
சாவதற்கு அஞ்சினரா? சற்றேனும் இல்லை
சாக்காடு அவர்களுக்குப் பூக்காடு வன்றோ?
பூவிரிந்த சோலைமிகு தென்னாட்டிற் காக
பொன்னுடலைப் பரிசாக அளித்திடுவீர், வீரர்
கூவியழைத் தேகுகின்ற அணிவகுப்பில் சேர்ந்து
கூர்வாளை வீசிடுவீர் கொத்தடிமை தீர்ப்பீர்.

தாய்நாடே தன்னுடு தாய்நாட்டின் விலங்கு
தனக்கிட்ட விலங்கென்று நெஞ்சம்புண் ணாகி
பாய்ந்துசெலும் புலிபோல பகைவர்மேல் பாய்ந்து
பொன்னாட்டின் தளையறுப்பீர் அதன்பொருட்டு போரில்
மாய்ந்தழிந்து போனாலும் மக்களுளத் திரையில்
மறையாத ஓவியமாய்ப் பொலிவுற்றுத் திகழ்வீர்
வாய்மைஇது தாய்நாட்டின் பொன்விலங்கை உடைக்க
வாளேந்தி அணிவகுத்து செருமுனைக்குச் செல்வீர்.

பேச்சுரிமை எழுத்துரிமை பிறப்புரிமை வேண்டும்
புவிமீது பிறர்க்கீடாய் நாம்வாழ வேண்டும்
மூச்சுள்ள வரையிங்கே பிறரடியைப் பணிந்து
மூங்கையர்போல் நாம்வாழ்தல் தமிழர்க்கே இழுக்கு
ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளானோம் இனிமேல்
இதைப்பொறுக்க இயலாது வேங்கைபோல் பாய்ந்து
வீச்சொன்றுத் துண்டிரண்டாய்ப் பகைபுலத்தை வெட்ட
வீறுகொண்டு எழுந்திடுவீர் விலங்குடைக்கச் செல்வீர்.

சரிதாவில் வந்த கவிதையின் தழுவல்.

— 3ம் பக்கத் தொடர்ச்சி —

மனிதர் வாழ்வுக்கு உறவு முதன்மையான தேவை. ஒருவரையொருவர் நம்பி, ஒருவர்க்கொருவர் உதவி வாழ்வதே இயற்கை. உறவு அணுக்கமான தொடர்பு. உறவை வெட்டிப் பிரிப்பது எளிதன்று. உண்மையான உறவு நீடித்து நிற்கும், அழியாது.

குளம்போன்ற மனிதர்வாழ்வுக்கு அல்லிபோன்ற உண்மையான உறவு இன்றியமையாதது. நிறைந்திருக்கும் குளத்திலும் அல்லி இலை விரித்துப் பூரித்துக் காட்சிதரும். குளத்தின் செழிப்பை அல்லியில் காணலாம். நீர் அற்றுவிட்ட குளத்திலும் அல்லி வாழும். ஆனால் அது வதங்கிய வாழ்வு. குளத்தின் அவல நிலையைக் காட்டும் அடையாளம் அது. உண்மையான உறவினர்களும் அல்லியைப்போலவே கெட்டுப் போனாலும் நம்மோடு ஒட்டியிருப்பார்கள். நம் வாழ்வு வளமாக இருந்தால் அந்த வளம் அவர்களிடம் மின்னும். நம்மிடம் பசை யற்றுவிட்டால் அவர்களிடமும் அந்த வாட்டத்தைக் காணமுடியும். செழுமை, வறுமை, வளப்பம், வாட்டம், வாழ்வு, தாழ்வு, பெருக்கம் கேடு ஆகிய எல்லாக் காலங்களிலும் நம்மோடு அவர்கள் இருப்பார்கள்.

இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் வறுமை வந்த போதும் நம்மைவிட்டுப் பிரியாதவர்களே உண்மையான சுற்றம். அவர்கள் அல்லிக்கொடி போன்றவர்கள்; நீர்ப்பறவைகள் அல்லர்.

★

[மலாயா வானொலி தமிழ்ப் பள்ளிப் பகுதியில் 28-2-58 அன்று ஒலிபரப்பப்பட்டது.]

மே முதல்நாளில்

கட்டுரைப் பெட்டகமாய்
கவிதைச் சுரங்கமாய்
சிறுகதைப் புதையலாய்
சித்திரக் கூடமாய்
வருகிறது

முல்லை

- சிறப்பு மலர் -

அரசியல் அறிஞர்கள்
மொழித்துறை முனைவர்கள்
இலக்கியப் பேராசிரியர்கள்
கவிக்குலச் செல்வர்கள்
சிறுகதை மன்னர்கள்
புகழ்பெற்ற எழுத்தாளர்கள்
எல்லோரும் எழுதுகிறார்கள்.

★

முல்லை

சிறப்பு மலர்

செந்தமிழ்க் கருவூலம்
கருத்துக் களஞ்சியம்
கொள்கை முரசு

★

கண்ணைக் கவரும் வண்ண முகப்பு
கருத்தை ஈர்க்கும் மூவண்ணப் படங்கள்
அழகொழுகும் ஓவியங்கள்
அருமையான புகைப்படங்கள்
சுவைமிகுந்த கேலிச்சித்திரங்கள்
எல்லாம் உண்டு மலரில்—அதில் இல்லாதன இல்லை!

முல்லை

சிறப்பு மலர்

ஏராளமான பக்கங்கள்; விலை ரூ. ஒன்றுதான்!
இப்பொழுதே உங்களூர் விற்பனையாளரிடம் சொல்லிவையுங்கள்.

முல்லை :: சென்னை-6.

வெண்பாப் போட்டி

14. கலைக்கும் கலையாக் கலை.

★ மணமான சின்னுள் மகிழ்ந்திருந்து, தன்னைக்
கணவன் பிரிந்திட்ட காலும்—குணத்தில்
மலைநிகர்த்த கண்ணகியின் மாக்கற்பே 'காம(ன்)
கலை'க்கும் கலையாக் கலை.

—தாம்பரக்கிழான், சென்னை.

❁

'வஞ்சக் கலை'யறியார்; 'வாழ்வுக் கலையோடு
'செஞ்சொற் கலையறிவார்; செந்தமிழர்—நெஞ்சில்
நிலைபெற்ற நற்கலையுள் நீள்வீரமே 'காதற்
கலை'க்கும் கலையாக் கலை.

– ச. மருதமுத்து, உடுமலைப்பேட்டை.

❁

கன்னுண்டால் சித்தம் கலங்கும் இளந்தமிழின்
வெள்ளத்தில் மூழ்கில் விரியுமடா—மெள்ள
வலைவீசி நம்மை வயமாக்கும் நெஞ்சைக்
கலைக்கும் கலையாக் கலை.

—ஆ. கோவிந்தராசன், குடந்தை.

❁

சிந்திக்க, நன்றுய்ச் சிரிக்க, நிலையான
செந்தமிழைக் காத்திட, சீர்திருந்த—நைந்த
நிலைபோக்க நன்று யுதவும், வறுமை
கலைக்கும் கலையாக் கலை.

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

❁

முத்தமிழாய்; மூவர் முறைநாடாய்; மும்மணியாய்;
கொத்தாகப் பாக்கள் கொடுப்பதாய்—நித்தம்
நிலைக்கும் தமிழர் கலையே, வடவர்
கலைக்கும் கலையாக் கலை.

—மு. சாந்தம், மதுரை.

❁

இன்னிசையெல் லாம்தழுவல்! இன்கதையு மேஇரவல்!
பண்ணெல்லாம் 'டப்பா'வோ! பைந்தமிழா!—இன்னே
தொலையட்டும்! வேண்டாம்! நம் தாய்தமிழின் மானம்
கலைக்கும் கலையாக் கலை.

—க. தங்கவேலன், சேர்வைநகர்.

❁

கூட்டும், இருவரைக் கொல்விக்கும்; நல்லின்பம்
ஊட்டும்; பிரிவதனை யுண்டாக்கும்;—ஏட்டில்
நிலைக்கும்! நிலையில்லாக் காதல்தான் எந்தக்
கலைக்கும் கலையாக் கலை.

—சோ. கண்ணப்பன், பேரூர்.

❁

சோலை வழிநடந்த சுந்தரியை யான்மறித்து
ஏழைக் கொருமுத்தம் ஈயென்றேன்—காளை
உளம்நொந்தேன் வாவென்றேன் உற்றதறி தென்றல்
கலைக்கும் கலையாக் கலை.

—த. ப. இரத்தினம், முதுகுளத்தூர்.

❁

வள்ளுவரும் காப்பியரும் வாழ்க்கையின் தேவையென
அள்ளி அளித்த அருங்கலையாம்—விள்ளும்
விலையில் தமிழ்க்கலையே, வேற்றார்தம் ஈனக்
கலைக்கும் கலையாக் கலை.

—சி. சிவராமலிங்கம், சென்னை-1.

❁

குங்குமம் தேய்த்தாற்போல் கொவ்வை யறைத்தாற்போல்
தங்கமுகம் நாணத்தாற் தான்சிவக்க—பொங்கும்
மலையத்துப் பூந்தென்றல் மங்கை சிலிர்க்கக்
கலைக்கும் கலையாக் கலை.

—குறிஞ்சி. ப. இளம்பரிதி, துருஞ்சிப்பட்டி.

❁

தென்னகத்து ஆலயங்கள் தித்திக்கும் ஓவியங்கள்
மண்ணகத்து வேறில்லை பண்ணிறை—காவியங்கள்
கண்ணாலே கண்டாலும் கல்மனதைப் பாகாய்
கலைக்கும் கலையாக் கலை.

—புள்ளரசு, கல்லிடைக்குரிச்சி.

❁

கலையை விரும்பியான் கற்பதால் வாழ்வு
கலையும் எனநீ கலங்கேல்—சிலையின்
நிலைக்கு நிகராம்உன் நெற்றியென் நெஞ்சைக்
கலைக்கும் கலையாக் கலை.

—ச. இராமசாமி, கயற்கண்ணிபுரம்.

❁

செந்தமிழ் காக்கும்; சிதைவுற்ற மக்களுக்கு
வந்துள்ள பேரிடரைப் போக்கிவிடும்;—சாய்ந்த
மலைபோல் தவிக்கின்ற நம்நாட்டின் மாசைக்
கலைக்கும் கலையாக் கலை.

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

❁

வீரத்தால் மானத்தால் வெம்படை வீசிவரும்
திரத்தால் தேர்ந்த திராவிடர்—ஆரத்
திளைத்தாலும் அன்னைபுகழ் மீட்பதுதான் துன்பக்
கலைக்கும் கலையாக் கலை.

—நா. இளங்கீரன், திருவையாறு.

❁

கூத்தாடி என்றுநமைக் கூறிச் சிரிக்கின்ற
காத்தாடிக் கட்சியரும் கண்டிடவே;—கூத்துச்
சிலையாகிக் கூற்றுமிச் 'சர்க்காரை' மாற்றிக்
கலைக்கும் கலையாக் கலை.

—அ லெ. சுப்பிரமணியன், புளியங்குளம்.

❁

ஆரியம் ஆங்கிலம் அச்சுறுத்தும் இந்தியுடன்
போரிட்டு வெற்றிப் புகழுடன்—பாரில்
தலைநிமிர்ந்து வாழும் தமிழொன்றே மாற்றார்
கலைக்கும் கலையாக் கலை.

—வெ. வேங்கடசாமி, பாலையம்பட்டி.

❁

இந்தியே ஆட்சிமொழி என்றே இயம்புகிறார்
மந்திரியார் மார்தட்டிப் பேசுகிறார்—விந்தை!
நிலைபெற்றே நீடித்தால் ஓர்நாள் அரசைக்
கலைக்கும் கலையாக் கலை.

—பெ. இராசேந்திரன், மருதங்குடி.

❁

உள்ளத் தொளியேற்றும், ஊன் உடலில் தேன்பிழியும்
வெள்ளக் குருதியில் வீரமிகும்,—வள்ளல்
இலையெனு நிதல்போல் எம்தமிழ்ப்பா இன்னல்
கலைக்கும் கலையாக் கலை.

—பால. அருணசலவடிவாம்பாள், இராயகிரி.

❁

சொல்லின் நயத்தில் சொரியும் கருத்துடன்
மல்லல் மழலை மலருமே—இல்லில்
நிலைத்த அமுதை நிறைக்கும் குழவி
கலைக்கும் கலையாக் கலை.

—அன்பின் ஒளி, தஞ்சை.

★ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு "தென்றல்" சந்தா.

பாரிஸ் அழகிகள்

கவர்ச்சிமிகுந்த பாரிஸ் யுவதிகளின் இயற்கை அழகை பலவித படுக்கையறைத் தோற்றத்தில் காணவல்ல 36 அசல் போட்டோ படங்கள் ரூ. 10. 24 படங்கள் ரூ. 7. முன் பணம் அனுப்புக. தபாற்செலவு இலவசம். சாம்பிள்கள் கிடையாது

வீனஸ் டிரேடிங் கம்பெனி (தெ.) தபால் பெட்டி 1693, சென்னை-1.

ராஜா பார்லி பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.
ஏஜெ: A. சங்குபிள்ளை, 11B, திண்டுக்கல்ரோடு, மதுரை

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு